நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
22 AUG 2008
சென்னை-600 005

**சுருக்கம்**

நகராட்சி நிர்வாகம் – ஆவடி நகராட்சி – 9.8.08 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நகராட்சி திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா – விழாவிற்கான செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது

---

**அரசு ஆணை (ப) எண். 352** நாள் :19.8.2008

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி4) துறை**

**படிக்கப்பட்டது :**

1) ஆவடி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.18429/2008/இ1, நாள் 18.7.2008

2) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.37498/2008/எம்3, நாள் 21.7.2008

---

**ஆணை :**

ஆவடி நகராட்சியில் 9.8.2008 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிப்படை வசதிகள், திட்டப் பணிகளான குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், புதிய அலுவலக கட்டிடப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட உள்ளது என்றும், இவ்விழாவிற்கான மேடை, பந்தல், மின் வசதி மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்ய உத்தேச செலவினம் ரூ.65.30 இலட்சம் ஆகும் என்றும் தெரிவித்து இச்செலவினத்தினை நகராட்சிக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும், அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை ஒப்பளிப்புப் பணியாக பொதுப்பணித் துறை மூலமாக மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும் ஆவடி நகராட்சி ஆணையர் மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். இச்செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக ஆணையர் இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் பரிந்துரை செய்துள்ளார். இதற்காக ஆவடி நகர் மன்றத் தீர்மானம் எண்.1450 நாள் 22.7.08–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இச்செலவினத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ.65.30 இலட்சம் பொதுப்பணித் துறையினரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

2) மேலே பத்தி 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவடி நகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. பரிசீலனையின் முடிவில், ஆவடி நகராட்சியில் 9.8.2008 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிப்படை வசதிகள், திட்டப் பணிகளான குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், புதிய அலுவலக கட்டிடப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கான மேடை, பந்தல், மின் வசதி

மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்ய உத்தேச செலவினத் தொகையாக ரூ. 40.00 இலட்சம்(ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) அரசு மானியமாக வழங்கியும், மேலும் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை ஒப்பளிப்பு பணியாக பொதுப்பணித்துறை மூலமாக மேற்கொள்ள அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2217 – நகர்ப்பகுதி வளர்ச்சி – 05 – ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் 191. மாநகராட்சிகளுக்கு நிதியுதவி– I திட்டத்தில் சேராதது – AA மாநகராட்சிகளுக்கு உதவி மானியங்கள் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (கு.தொ.கு.2217 05 191 AA 0938)"

4) மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் "புதுப்பணி" குறித்ததாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில் இச்செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இத்தொகையினை முன்பணமாக பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இந்த ஆணையின் இருபடிகளை இணைத்து தவறாது நிதி (வ.செ.1) துறைக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2008–2009 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டில் சேர்த்து சட்டமன்ற பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு உரிய கருத்துருக்களை நிதி (BG.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே பத்தி –2 ல் வழங்க உத்தரவிட்டுள்ள மானியத் தொகையினைப் பெற்று ஆணையாளர், ஆவடி நகராட்சிக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

6) இவ்வாணை, அ.சா.கு.எண்–1, நாள்: 28.7.08–ன் படி பொதுப்பணித்துறையின் இசைவுடனும், அ.சா.கு.எண்.49757/ந.நி.(ம)கு.வ./08, நாள் 14.8.08–ன் படி நிதித்துறையின் இசைவுடனும் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 596(ஐந்நூற்று தொண்ணூற்று ஆறு) .

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், (கட்டிடம்) பொதுப்பணித்துறை,சென்னை–5.

ஆணையர், ஆவடி நகராட்சி, ஆவடி.
மாநில கணக்காயர், சென்னை – 18 / 35.
சம்பள கணக்கு அலுவலர்,சென்னை –5.

நகல்

மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
செயலரின் தனிச் செயலர், சென்னை –9.
நிதி (*BG.1*, *BG.II*, *MAWS*) துறை, சென்னை–9.
பொதுப்பணித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(அ2) துறை, சென்னை –9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

மெ.தி.நந்தனி 20/8/08
மெ.தி.நந்தனி,
அரசு சார்புச் செயலாளர்.
20/8/08